வாக்குமூலம்

## மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றம், மயிலாடுதுறை.

## முன்னிலை:- திரு. B. ராஜவேல், B.Sc., B.L.,

## மாவட்ட நீதிபதி, மயிலாடுதுறை.

அமர்வு வழக்கு எண் 78/2022

| | | | |
|---|---|---|---|
| அரசு தரப்பு சாட்சி | 3 | நாள் | 05.09.2023 |
| பெயர் | பெருமாள் | ஜாதி | |
| தந்தை பெயர் | | தொழில் | |
| கிராமம் | | சமயம் | |
| தாலுக்கா | | வயது | |

சாட்சி அழைக்கப்பட்டு உறுதி மொழி செய்யப்பட்டு முதல் விசாரணை செய்யப்படுகிறது.

முதல் விசாரணை

நான் சோழம்பேட்டை வாய்காங்கரை தெருவில் குடியிருந்து வருகிறேன். நான் மூவலூர் காய்கறி கடையில் வேலை பார்த்து வருகிறேன். இறந்த வைத்தியநாதசுவாமியை தெரியும். ஆஜர் எதிரிகளை தெரியும். 26.11.2021ம் தேதி மதியம் 12.45 மணிக்கு வீட்டிற்கு சென்றுவிட்டு மாலை 6 மணிக்கு கடைக்கு திரும்பினேன். இறந்துபோன வைத்தியநாதனுக்கும் எதிரிகளுக்கும் சண்டை நடந்ததாக கேள்விபட்டேன். அதன் பின்னர் வைத்தியநாதன் இறந்ததாக கேள்விபட்டேன். போலிசார் என்னை விசாரித்தார்கள்.

அரசு தரப்பில் சாட்சியை பகுதி பிறழ் சாட்சியாக பாவித்து குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கோரியதற்கு அனுமதிப்பக்கப்பட்டது.)

அரசு தரப்பில் குறுக்கு விசாரணை

கடந்த 26.11.2021ம்தேதி மதியம் 2 மணிக்கு நான் கடையில் இருந்தபோது கடைக்கு எதிரே உள்ள வேலு டைலர் கடைமுன்பு வைத்தியநாத சுவாமியும், திவாகரும் தினேஷ் என்வரும் சண்டை போட்டார்கள் என்றும், முன்னதாக அவர்கள் பலமுறை கடைத்தெருவிலும் அவர்களது தெருவில் சண்டைபோட்டுகொண்ருந்தது எனக்கு தெரியும் என்றும்,23.11.2021 மதியம் 2.30 மணிக்கு நான் கடையில் இருந்தபோது லெசாக மழை தூரி கொண்டிருந்தது. வழக்கம்போல எதிரிகளும் வைத்தியநாதசுவாமியும் சண்டை போட்டனர் என்றும்,

அப்போது வைத்தியநாதசுவாமியை பிளாஸ்டிக் விலக்கமாற்றால் திவாகர் வீட்டில் வைத்து சண்டை போட்டு கொண்டிருந்தபோது நான் அவர்களை விளக்கிவிட்டேன் என்றும் அப்போது அங்கு வந்த தினேஷ் இந்த குச்சிகாரி மகனால் தொல்லையாகி விட்டது இவரை அடித்து காலி செய்யவேண்டும் என்று அவரை பின்புறமாக பிடித்து கொண்டு திவாகர் மர கட்டையை எடுத்து வைத்தியநாதசுவாமி தலையில் அடிக்க அவருக்கு தலையில் காயம் ஏற்பட்டு தப்பி ஓடி பேருந்தில் ஏறி மயிலாடுதுறை மருத்துவமனைக்கு சென்றார் என்றும், இந்த விவரத்தை என் கடை உரிமையாளரிடம் கூறினேன் என்றும், ஆனால் வைத்தியநாதசுவாமி 27 ம் தேதி இறந்துபோனார் என்றும் தெரிந்துகொண்டேன் என்றும், போலிசார் 28ம் தேதி என்னை விசாரித்தார் என்று கூறினேன் என்றால் சரியல்ல.